## திருவாரூர் மாவட்டத்தில் 2 லட்சம் மரக்கன்றுகள் நட திட்டம்

First Published : 10 Jan 2012 02:15:00 PM IST

திருத்துறைப்பூண்டி, ஜன. 9: திருவாரூர் மாவட்டத்தில் வனத் துறை சார்பில், 2 லட்சம் மரக் கன்றுகள் நடுவதற்கு திட்டமிடப்பட்டு, அதற்கான முன்னேற்பாட்டுப் பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன.

தமிழக முதல்வரின் அறிவுறுத்தலின் பேரில், புவி வெப்பமயமாதலை தடுக்கும் வகையிலும், சுற்றுப்புற சூழலை பாதுகாக்கும் வகையிலும், திருவாரூர் மாவட்டத்தில் 2 லட்சம் மரக் கன்றுகள் நடுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

இதற்கான நாற்றங்கால் திருவாரூர் மாவட்டம், வடுவூரில் அமைக்கப்பட்டுள்ளது. இதில் வேம்பு, மலை வேம்பு, வாதநாராயணா, பாதாம் மரம், தேக்கு மருது, நாவல், புங்கமரம் உள்ளிட்ட பல்வேறு வகை மரக் கன்றுகள் நாற்றங்காலில் தயார் செய்யப்பட்டுள்ளன. முதல்கட்டமாக, கொறுக்கை கால்நடைப் பண்ணையில் 30 ஆயிரம் மரக்கன்றுகளும், அதே பகுதியில் உள்ள அரசு தொழில்நுட்பக் கல்லூரி வளாகத்தில் 15 ஆயிரம் மரக்கன்றுகளும், கொறுக்கையில் இருந்து த. கீழக்காடு வரையிலான கிழக்குக் கடற்கரை சாலையில் (திருவாரூர் மாவட்டம்) 30 ஆயிரம் மரக் கன்றுகளும், நீடாமங்கலம் - மன்னார்குடி வரையிலான ரயில்வே பாதை பகுதிகளில் 15 ஆயிரம் மரக்கன்றுகளும் நட திட்டமிடப்பட்டு, குழிகள் தோண்டும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

இதற்கான ஏற்பாடுகளை திருவாரூர் மாவட்ட வன அலுவலர் குருசாமி, மன்னார்குடி வனச் சரகர் எஸ். தங்கவேலு, வனவர்கள் வி. சுந்தரேசன், செல்வகுமார் உள்ளிட்ட வன அலுவலர்கள் செய்து வருகின்றனர்.

## தோட்டக்கலைக் கல்லூரி முதல்வருக்கு தேசிய விருது

First Published : 10 Jan 2012 11:15:28 AM IST

பெரியகுளம்,ஜன. 9: பெரியகுளம் தோட்டக்கலைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய முதல்வர் முனைவர் வி.பொன்னுசாமிக்கு(படம்) தேசிய விருது வழங்கப்பட்டுள்ளது. புது தில்லி யில் உள்ள இந்திய சர்வதேச நட்பு மையம், இவருக்கு 2011-ம் ஆண்டிற்கான தேசிய கெ்ரவ விருது மற்றும்

பாரத ஜோதி விருது ஆகியவற்றை, அண்மையில் புதுதில்லியில் நடந்த தேசிய ஒருமைப்பாடு மற்றும் பொருளாதார வளர்ச்சிக் கருத்தரங்கில் வழங்கியது. இவர் தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தில் கடந்த 1979-ல் உதவி பேராசிரியராக இணைந்து, 1986-ல் இணை பேராசிரியராகவும், பின்பு 1992-ல் பேராசிரியராகவும் பதவி உயர்வு பெற்றார். இவர் தோட்டக்கலைப் பயிர்களில் இது வரை 21 ரகங்களை வெளியிட்டுள்ளார். இவர் 19 புத்தகங்கள், 118 ஆராய்ச்சி கட்டுரைகள், 14 சர்வதேசக் கட்டுரைகள் உள்ளிட்ட பல்வேறு கட்டுரைகளை வெளியிட்டுள்ளார்.

**முந்திரி நிலங்களில் மாற்றுப்பயிர்: அரசு உதவ கோரிக்கை**

First Published : 10 Jan 2012 10:59:30 AM IST

நெய்வேலி ஜன. 9: புயலால் பாதிக்கப்பட்டுள்ள முந்திரி விளைநிலங்களில் மாற்றுப்பயிர் சாகுபடி செய்வதற்கு அரசு உதவிட வேண்டும் என்று சிதம்பரம் தொகுதியின் முன்னாள் எம்பி வி.குழந்தைவேலு கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் சனிக்கிழமை வெளியிட்டுள்ள அறிக்கை:

கடலூர் மாவட்ட கிராம மக்களின் வாழ்வாதாரத்திற்கு அடிப்படையாக அமைந்து தொடர்ந்து பயனளித்து வந்த மா, பலா, முந்திரி, தென்னை போன்றவை புயலினால் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளன. இனி இவற்றை வளர்த்து பலன் பெற 15 ஆண்டுகளுக்கு மேலாகும்.

எனவே பாதிக்கப்பட்ட பகுதிகளில் வேர்க்கடலை, கம்பு, கேழ்வரகு, சோளம், தினை, துவரை போன்ற மாற்றுப் பயிர்களை உடனடியாக சாகுபடி செய்வதற்கு ஏதுவாக நிலங்களைத் தயார் செய்வதற்கு அரசு உதவிட வேண்டும். புயலால் பாதிப்பு பெருமளவில் இருப்பதால் மத்திய அரசு போதுமான அளவில் நிவாரண நிதி ஒதுகீடு செய்ய வேண்டும்.

புயல் பாதித்த கிராமப்புறங்களில் வசிக்கும் விவசாயிகளுக்கு விவசாயக் கடனை ரத்து செய்ய வேண்டும் என அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார் குழந்தைவேலு.

**வேளாண்மை, மின் உற்பத்தியிலும் கவனம் தேவை**

First Published : 10 Jan 2012 02:05:11 PM IST

கும்பகோணம், ஜன. 9: இந்தியாவின் வளர்ச்சிக்கு சவால்களாக உள்ள வேளாண்மை மற்றும் மின் உற்பத்தியில் கவனம் தேவை என்றார் பிரதமரின் பொருளாதார ஆலோசகர் சி. ரங்கராஜன்.

கும்பகோணம் சாஸ்த்ரா பல்கலைக்கழக சீனிவாச ராமானுஜன் மையத்தில், 7-ம் ஆண்டு நாராயணன் நினைவு சொற்பொழிவு திங்கள்கிழமை நடைபெற்றது.

இதில் பிரதமரின் பொருளாதார ஆலோசனை குழுத் தலைவர் சி. ரங்கராஜன், "பொருளாதாரச் சூழ்நிலை, நடப்பு பிரச்னைகளும், வருங்கால எதிர்ப்பார்ப்புகளும்' என்ற தலைப்பில் பேசியது:

இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி கடந்த 20 ஆண்டுகளில் சீராக இருந்து வருகிறது. பொருளாதார வளர்ச்சி வறுமையை குறைக்கும் வகையில் மாற்ற வேண்டியது அவசியம் என்பதால் திறனுக்கு மதிப்பளித்து பொருளாதார ஏற்றத் தாழ்வுகளை குறைத்தல் மிகவும் அவசியம். ஐ.நா. சபையின் மனிதவள மேம்பாட்டுக் குறியீட்டில் 119 -வது இடத்தில் இந்தியா உள்ளது.

1991 -ல் கடுமையான பொருளாதார சூழ்நிலையை ஒரு வாய்ப்பாக மாற்றி, பல்வேறு மாற்றங்கள் பொருளாதாரக் கொள்கையில் கொண்டு வரப்பட்டன. அந்த சீர்திருத்தங்களுக்கு முன்னர் 5.6 சதமாக இருந்த வளர்ச்சி, சீர்திருத்தங்களுக்கு பின்னர் 6.8 சதமாக மாறியது. கடந்த 6 ஆண்டுகளில் சராசரியாக 8.6 சதமாக உள்ளது. மொத்த உள்நாட்டு உற்பத்தி தற்போது 7 சதமாக உள்ளது.

உலகளவில் ஏற்பட்ட பொருளாதார சிக்கலினால் தொடர்ச்சியாக 9 சதத்திற்கும் மேலாக இருந்த பொருளாதார வளர்ச்சி 2008- 09 ல் 6.7 சதமாகக் குறைந்தது. எத்தகு சூழலையும் எதிர்கொள்ளும் வகையில், எந்தவொரு நிதி சிக்கலிலிருந்தும் தற்காத்து கொள்ளும் வகையில் இந்திய பொருளாதாரம் அமைந்துள்ளது.

மாறிவரும் சூழ்நிலைகளால் தற்போதைய வளர்ச்சி விகிதம் 7 சதத்திலிருந்து 7.25 சதம் வரை இருக்க வாய்ப்புள்ளது.

நம் நாடு உயர் வளர்ச்சி வகிதமான 9 சதத்தை எட்ட வேண்டுமானால் சேமிப்பு மற்றும் முதலீட்டு துறையில், போதிய கவனம் செலுத்த வேண்டும்.

கொள்கை உருவாக்குபவர்களுக்கான சவால்களாக பணவீக்கம், நிதிப் பற்றாக்குறை, நிதி ஒருங்கிணைப்பு ஆகியன உள்ளன. நடப்பு கணக்கு பற்றாக்குறை மொத்த உள்நாட்டு உற்பத்தியில் தற்போது 2.6 சதமாக உள்ளது.

நீடித்த வளர்ச்சிக்கு நிதி ஒருங்கிணைப்பு மிகவும் தேவையான ஒன்றாகும். வளர்ச்சியை அடைவதில் இடைக்கால சவால்களாக வேளாண்மைச் சூழலும், மின்சாரமும் உள்ளது.

முக்கிய உணவுப் பொருள்கள் உற்பத்தியில் சீனாவை காட்டிலும் இந்தியா பின்தங்கியுள்ளது. நீடித்த உயர் வளர்ச்சியை அடைய இவ்விரு துறைகளிலும் நாம் கவனம் செலுத்த வேண்டும்.

நவம்பர் 2011 -ல் மொத்த உள்நாட்டு உற்பத்தி அடிப்படையில் பணவீக்கம் 9.1 சதமாக இருந்தது. மார்ச் 2012 -ல் 7 சதமாக குறைய வாய்ப்புள்ளது.

சுதந்திரத்திற்கு பிந்தைய ஆரம்ப காலங்களில் பணவீக்கம், விலைவாசி உயர்வுக்கு வித்திட்டதாக வாதிடப்பட்டது.

அந்தச் சூழல் மீண்டும் வராமல் குறைவான பணவீக்க விகிதம் என்ற நிலையை ஏற்படுத்த வேண்டும்.

கொள்கை முடிவுகளின்படி மூலம், நடப்பு பணவீக்கத்தை குறைத்து 5 சதமாக உருவாக்க வேண்டும்.

வளர்ச்சி என்பது வறுமையை ஒழிப்பதிலும், வேலைவாய்ப்பை பெருக்குவதிலும்தான் உள்ளது. நமது நாட்டின் வளர்ச்சி 9 சதமாக இருக்கும் பட்சத்தில், நமது மொத்த உள்நாட்டு உற்பத்தி 2025-ல் 8,000 முதல் 10,000 அமெரிக்க டாலர் வரையிலான நிலையை அடையும் என்றார் அவர்.

விழாவில் பல்கலைக்கழகத்தின் திட்டம் மற்றும் மேம்பாட்டு புலத் தலைவர் வைத்தியசுப்பிரமணியம் வரவேற்றார். பல்கலைக் கழக துணைவேந்தர் பேராசிரியர் சேதுராமன் மற்றும் சிட்டி யூனியன் வங்கித் தலைவர் ஆர். பாலசுப்பிரமணியம் ஆகியோர் முன்னிலை வகித்தனர். சிட்டி யூனியன் வங்கியின் மேலாண் இயக்குநர் என்.காமகோடி நன்றி கூறினார்.

**மேட்டூர் அணை நீர்மட்டம்: 98.29 அடி**

First Published : 10 Jan 2012 02:13:12 PM IST

தஞ்சாவூர், ஜன. 9: மேட்டூர் அணையின் நீர்மட்டம் திங்கள்கிழமை மாலை 98.29 அடியாக இருந்தது. அணைக்கு வினாடிக்கு 1,088 கன அடி தண்ணீர் வந்து கொண்டிருந்தது. அணையில் இருந்து வினாடிக்கு 500 கன அடி தண்ணீர் திறக்கப்பட்டது.கல்லணையில் இருந்து வினாடிதோறும் காவிரியில் 200 கன அடி, வெண்ணாற்றில் 3,501 கன அடி, கல்லணைக் கால்வாயில் 1,804 கன அடி வீதம் தண்ணீர் திறக்கப்பட்டது. கொள்ளிடம் ஆற்றில் தண்ணீர் திறக்கப்படவில்லை.

**ஜன.12-ல் கெண்டை மீன் வளர்ப்புப் பயிற்சி**

First Published : 10 Jan 2012 12:15:38 PM IST

Last Updated : 10 Jan 2012 12:45:33 PM IST

நாமக்கல், ஜன. 9: நாமக்கல் வேளாண் அறிவியல் நிலையத்தில் வியாழக்கிழமை (ஜன. 12) பொது நீர்நிலைகளில் கெண்டைமீன் வளர்ப்பு என்ற தலைப்பில் ஒரு நாள் இலவசப் பயிற்சி நடைபெறுகிறது.

வளர்ப்புக்கான கெண்டை மீன் இனங்களைக் கண்டறிதல், மீன் வளர்ப்புக்கு இடம் தேர்ந்தெடுத்தல், பொது மீன் குளம் பராமரிப்பது, மீன் குஞ்சுகளை இருப்பு செய்தல், மீன்

வளர்ப்பில் தீவன மேலாண்மை, நீர் தர மேலாண்மை, நோய் மேலாண்மை மற்றும் பொருளாதாரம் உள்ளிட்ட அனைத்துத் தொழில்நுட்பங்கள் குறித்தும் பயிற்சி அளிக்கப்படும். விவசாயிகள், பண்ணையாளர்கள், ஊரக மகளிர், இளைஞர்கள் மற்றும் ஆர்வமுள்ளவர்கள் கலந்து கொள்ளலாம்.

விருப்பமுள்ளவர்கள், நாமக்கல்-மோகனூர் சாலையில் உள்ள கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் செயல்படும் வேளாண் அறிவியல் நிலையத்துக்கு நேரிலோ அல்லது தொலைபேசி மூலமாகவோ புதன்கிழமைக்குள் (ஜன. 11) பெயர் முன்பதிவு செய்வது அவசியம்.

மேலும் விவரங்களுக்கு 04286-266345, 266244, 266650 என்ற எண்களில் தொடர்பு கொள்ளலாம்.

## முட்டை விலை ரூ.2.95

First Published : 10 Jan 2012 12:15:29 PM IST

Last Updated : 10 Jan 2012 12:37:11 PM IST

நாமக்கல், ஜன. 9: நாமக்கல் மண்டலத்தில் முட்டை ஒன்றின் விலை 10 காசுகள் குறைந்து, ரூ.2.95 ஆக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இதற்கான முடிவு, நாமக்கல் மண்டல தேசிய முட்டை ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் திங்கள்கிழமை எடுக்கப்பட்டது.

இதுகுறித்து கோழிப் பண்ணையாளர்கள் கூறியது: புதுதில்லி, பிகார் மாநிலங்களில் குளிரின் தாக்கம் குறைந்து வருவதால், அம் மாநிலங்களின் முட்டை தேவை குறைந்து விட்டது. புத்தாண்டு சீசனில் முட்டை விலை அதிகமாக இருந்ததால், முட்டை விற்பனையில் சற்று தேக்கநிலை உருவானது. இந்த தேக்க நிலையை சீராக்க முடிவெடுக்கப்பட்டது. அதன்படி, முட்டை விலையை 10 காசுகள் குறைத்து, ரூ.2.95 காசுகளாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

## பயிர் பாதிப்பு: இழப்பீடு வழங்கக் கோரிக்கை

First Published : 10 Jan 2012 11:40:59 AM IST

காரியாபட்டி, ஜன. 9: மழை மற்றும் பனிப்பொழிவால் காரியாபட்டி பகுதியில் வெங்காய விளைச்சல் கடுமையாகப் பாதித்துள்ளது. எனவே, நிவாரணம் வழங்க வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

காரியாபட்டி அருகே ஆவியூர், அரசகுளம், குரண்டி, கடம்பங்குளம், மீனாட்சிபுரம், புல்லூர், தொடுவன்பட்டி, உப்பிலிக்குண்டு உள்பட 20-க்கும் மேற்பட்ட கிராமங்களில் ஆயிரக்கணக்கான ஏக்கர் பரப்பில் வெங்காயம் சாகுபடி செய்யப்பட்டிருந்தது. இதற்காக ஒவ்வொரு விவசாயியும் ஏக்கருக்கு சுமார் ரூ.25 ஆயிரம் வரை செலவு செய்தனர்.

வெங்காயம் விளைந்து அறுவடைக்கு தயார் நிலையில் இருந்தது.

இந்த நிலையில், சமீபத்தில் பெய்த மழையால் விளைந்த வெங்காயம் பெரும்பாலும் நிலத்திலேயே அழுகிவிட்டன. அழுகிய வெங்காயங்களை எடுக்க மனமின்றி, நிலத்தை மீண்டும் உழவு செய்து வேறு பயிர்களை விளைவிக்க தயாராகி வருகின்றனர்.

இதுகுறித்து விவசாயிகள் சங்கத் தலைவர் பழனிச்சாமி கூறுகையில்: இந்த முறை வெங்காய விளைச்சல் அதிகளவில் இருந்தது. மழை, பனியால் பயிரிலேயே காய்கள் அழுகிவிட்டன. கடன்பெற்று விவசாயம் செய்தோம்.

நிவாரணம் வழங்கக்கோரி வட்டாட்சியரிடம் மனு கொடுத்தோம். ஆனால், இதுவரை எவ்வித நடவடிக்கையும் இல்லை. எனவே, நிவாரணம் வழங்க மாவட்ட நிர்வாகம் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார்.

---

தினமலர்
உண்மையின் உரைகல்

## இனிக்க இனிக்க கரும்பு சாகுபடி

பதிவு செய்த நாள் : ஜனவரி 11,2012,00:00 IST



விவசாயத்திற்கான தண்ணீர் தேவை நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே வருகிறது. குறிப்பாக எங்கே நீர்ப்பாசனம் மற்றும் வறட்சிப் பிரதேச பயிர்கள் ஒருங்கே பராமரிக்கப் படுகின்றனவோ, அங்கே நீரின் அவசியம் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக உள்ளது. பெரும்பாலான நீர்பிடிப்பு பகுதிகளில் நீர்ப்பாசன பயிர்களான நெல் மற்றும் கரும்பு போன்றவை, சோளம் மற்றும் கம்புபோன்ற வறட்சிப் பிரதேச பயிர்களோடு சேர்ந்தே விளைவிக்கப்படுகின்றன. குறிப்பாக அதிக அளவு தண்ணீர் தேவைப்படும் பயிர்களில் இந்த வழிமுறைகளை கடைபிடிப்பது மிக மிக அவசியம். கரும்பு போன்ற அதிகஅளவு தண்ணீர் தேவைப்படும் பயிர்களில் சேமிக்கப்படும் நீரானது அதே பகுதியிலுள்ள மற்ற வறண்ட நிலப்பயிர்களுக்கு மிகவும் பயனளிக்கக்கூடியதாக இருக்கும்.

இன்று, இந்தியாவானது கரும்பு சாகுபடி நிலப்பரப்பிலும் (41 லட்சம் எக்டேர்) உற்பத்தியிலும் (2007ல் 35.5 கோடி டன்) பிரேசில் நாட்டிற்கு அடுத்து இரண்டாவது நிலையில் உள்ளது. இந்தியாவில் இன்று சர்க்கரை உற்பத்தி என்பது 30,000 கோடி மதிப்புள்ள 3.5 கோடி விவசாயிகள் சம்பந்தப்பட்ட, ஜவுளித்துறைக்கு அடுத்து இருக்கும் ஒரு மாபெரும் தொழில் துறையாக உள்ளது. சர்க்கரை தவிர தீவனம், காகிதம் மற்றும் முக்கியமாக எத்தனால் உற்பத்திக்கும் கரும்பு ஆதாரமாக உள்ளது.

**செம்மை கரும்பு சாகுபடி (எஸ்எஸ்ஐ)**: எஸ்எஸ்ஐ எனப்படும் "செம்மை கரும்பு சாகுபடி' முறையானது குறைந்த அளவு விதை நாற்றுகள் மற்றும் குறைந்த அளவு தண்ணீரை உபயோகித்து சரியான அளவு ஊட்டச்சத்து மற்றும் பயிர் பராமரிப்பின் மூலம் அதிக மகசூல் பெற வழிவகை செய்யும் ஒரு பயிற்சி முறையாகும்.

**இதன் முக்கிய கோட்பாடுகள்**:

1. ஒரு விதைப்பரு சீவல்களில் இருந்து நாற்றங்கால் அமைத்தல்
2. இனம் (25-35 நாட்கள் வயதான) நாற்றுக்களை எடுத்து நடவு செய்தல்
3. நடவின்போது வரிசைக்கு வரிசை குறைந்தது 5 அடி இடைவெளியும் நாற்றுக்கு நாற்று 2 அடி இடைவெளியும் பராமரித்தல்
4. நீர்ப்பாசனத்தின்போது தேவையான அளவு ஈரப்பதம் மட்டும் நிலவுமாறு நீர் பாய்ச்சுதல்
5. இயற்கையிலான உரங்கள், பயிர் பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு முறைகளுக்கு போதிய அளவு முக்கியத்துவம் அளித்தல்.
6. ஊடுபயிர் பராமரித்து மண்வளம் மற்றும் மகசூல் அதிகரிக்க ஆவன செய்தல்.

இத்தகைய முறையினால் தண்ணீர் உபயோகிப்பு திறன் கூடுகிறது. சரியான அளவிலான

உரங்களை உபயோகிப்பதன் மூலம் பயிர்களுக்கு தேவையான ஊட்டச்சத்து கிடைக்கிறது. காற்று மற்றும் சூரியஒளி அதிக அளவு பயிர்களுக்கு கிடைப்பதால் கரும்பில் சர்க்கரை கட்டுமானம் அதிகரிக்கிறது. மொத்த சாகுபடி செலவு விவசாயிகளுக்கு குறைவதோடு ஊடுபயிர் மூலம் இரட்டை வருமானம் பெறலாம் என்பது நிதர்சனமான உண்மையாகும். செம்மை சாகுபடி முறையானது அதிகளவிலான விதைக்கரணைகள், நீர் மற்றும் குறுகிய இடைவெளியுடன் நடைமுறைப்படுத்தப்படுகின்ற, தற்போது கடைபிடித்து வரும் கரும்பு சாகுபடி முறைக்கு ஒரு மாற்று முறை ஆகும்.-கோ.பி.வனிதா மற்றும் நா.சோ.வெங்கட்ராமன்,
வேளாண் அறிவியல் நிலையம்,வேளாண்மைக்கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம்,மதுரை-625 104.

**நவீன தொழில்நுட்பம்**

பதிவு செய்த நாள் : ஜனவரி 11,2012,00:00 IST

**பயிறு உற்பத்தியை பெருக்க முக்கிய தொழில்நுட்பங்கள்**: ரகம் தேர்வு: உளுந்து - வம்பன் 4, 5, 6, டி9, கோ5, ஏ.டி.டி.5, பாசிப்பயறு - வம்பன் 3, கோ.6, ஏ.டி.டி.3. துவரை - வம்பன் 2, 3, கோ.7, ஏ.பி.கே.1 ஆகிய மானாவாரிக்கு ஏற்ற ரகங்களைத் தேர்வு செய்தல் அவசியம்.
**விதையை கடினப்படுத்துதல்**: உளுந்துக்கு ஒரு கிலோ விதைக்கு 500 கிராம் சாம்பலுடன் 3 சதம் பசையைக் கலந்து உலர வைப்பதன் மூலம் விதை நீண்டகாலம், மழையில்லாத காலங்களிலும் மண்ணில் நிலைத்து நிற்கும். பாசிப்பயறை மாங்கனீசு சல்பேட் 100 பி.பி.எம்.கொண்டு விதை கடினம் செய்ய வேண்டும்.
துவரையை துத்தநாக சல்பேட் 100 பிபிஎம் கொண்டு விதை கடினம் செய்ய வேண்டும்.
விதைநேர்த்தி செய்வது அவசியம். சூடோமோனாஸ் 10 கிராம், டிரைகோடெர்மா விரிடி 4 கிராம், 1 கிலோ விதை என்ற அளவில் விதைநேர்த்தி செய்ய வேண்டும். ரைசோபியம், பாஸ்போ பாக்டீரியா, ஒரு பாக்கெட் வீதம் வடிநீரில் கலந்து காற்றில் உலரவைத்து பின் விதைக்க வேண்டும்.
**ஒருங்கிணைந்த உர மேலாண்மை**: அடியுரமாக தொழுஉரம், மக்கிய தென்னை நார்க்கழிவு, மண்புழு உரம் ஆகியவற்றில் ஒன்றை ஏக்கருக்கு 5-10 டன் என்ற அளவில் இடவேண்டும். ஏக்கருக்கு 5 கிலோ தழைச்சத்து, 25 கிலோ சாம்பல்சத்து அடியுரமாக இடவேண்டும். ஏக்கருக்கு 10 கிலோ மணிச்சத்தை 750 கிலோ தொழு உரத்துடன் கலந்து 30 முதல் 40 நாட்கள் வைத்திருந்து உரமேற்றப்பட்ட மணிச்சத்தை அடியுரமாக இடவேண்டும்.

**உயிர் உரமிடுதல்**: ரைசோபியம், பாஸ்போ பாக்டீரியா உயிர் உரத்தினை ஏக்கருக்கு 4 பாக்கெட் வீதம் அடியுரமாக இடுவதால் தழைச்சத்து, மணிச்சத்து பயறு வகைகளுக்கு சீராகக் கிடைக்கும். நுண்ணூட்டச்சத்து - தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம் வெளியிட்டுள்ள நுண்ணூட்டக் கலவைய எக்டருக்கு 2 கிலோ வீதம் அடியுரமாக இடவேண்டும். இவ்வாறு இடுவதால் பயறுகளில் பூக்கும் திறனும் காய்பிடிப்பும் அதிகரிக்கிறது.

**இலைவழி உரம்**: பூ உதிர்வதைக் குறைப்பதற்கும் அதிக காய் பிடிப்பதற்கும் தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தில் வெளியிடப்பட்டுள்ள "பயறு ஒண்டர்' ஏக்கருக்கு 2.25 கிலோவை 200 லிட்டர் தண்ணீரில் கலந்து பூக்கும் தருணத்திலும் 15 நாட்கள் கழித்து மறுமுறையும் தெளிக்க வேண்டும். துவரையில் அதிக அளவு பூக்கள் உதிர்வதால் என்.ஏ.ஏ.40 பி.பி.எம்.கரைசலை பூக்கும் தருணத்திலும் 15 நாட்கள் கழித்தும் தெளிக்க வேண்டும்.

**ஒருங்கிணைந்த களை நிர்வாகம்**: விதைத்த 3 நாட்களுக்கு பிறகு பெண்டிமெத்தின் 400 கிராம் களைக்கொல்லியை கையால் இயக்கப்படும் தெளிப்பானைக் கொண்டு தெளிக்க வேண்டும். பிறகு 25-30 நாட்களில் ஒரு களை பறிக்க வேண்டும்.

**ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு**: காய்ப்புழு, பச்சைப்புழு, காய்த்துளைப்பான், அசுவினி ஆகியவை முக்கியமானவை. காய்ப்புழு தாக்குதலைக் கட்டுப்படுத்த என்.பி.வி.வைரஸ் நச்சுயிரியைப் பயன்படுத்தலாம். பொருளாதார சேதநிலை 10 சதவீதத்திற்கு அதிகமாக இருந்தால் காய்ப்புழுக்களைக் கட்டுப்படுத்த புரோபனோபாஸ் 2 மிலி/ லிட்டர் தண்ணீர் என்ற அளவில் கலந்து தெளிக்க வேண்டும். வேப்பங் கொட்டைச்சாறு 5 சதம் அல்லது வேப்பெண்ணெய் 3 சதம் என்ற அளவிலும் தெளிக்கலாம்.

**வாடல் நோய்**: விதைகளை டிரைகோடெர்மா விரிடி கொண்டு விதைநேர்த்தி செய்ய வேண்டும். செடியைச்சுற்றி கார்பெண்டாசிம் மருந்தை ஒரு லிட்டர் நீருக்கு 1 கிராம் என்ற அளவில் கலந்து ஊற்றலாம்.

**மஞ்சள் தேமல் நோய்**: எதிர்ப்புத்திறன் கொண்ட வம்பன் 5, 6 ரகங்களைப் பயிரிடவும். மானோகுரோட்டோபாஸ் ஏக்கருக்கு 100 மிலி தெளிக்கவும். வேரழுகல் நோய், சாம்பல் நோய் ஆகியவற்றை சிபாரிசுப்படி கட்டுப்படுத்த வேண்டும்.

(தகவல்: முனைவர்கள் ப.கண்ணன், ப.பாலசுப்பிரமணியன், ப.அருணாசலம், மானாவாரி வேளாண்மை ஆராய்ச்சி நிலையம், செட்டிநாடு. 99764 06231)-டாக்டர் கு.சௌந்தரபாண்டியன்.

**உளுந்தில் மகசூல் அதிகரிக்க கடல்பாசி உர திரவம்**

பதிவு செய்த நாள் : ஜனவரி 11,2012,00:00 IST




கடல் பாசியானது தென்கிழக்கு கடற்கரைப் பகுதிகளான தொண்டி முதல் கன்னியாகுமரி, ராமேஸ்வரம் மற்றும் அந்தமான் நிக்கோபர் தீவுப் பகுதிகளில் அதிகமாகக் காணப்படுகின்றது. கடல்பாசியின் நிறத்தைக் கொண்டு மூன்று வகைகளாகப் பிரிக்கலாம். 1. பச்சைபாசி, 2. பழுப்புப்பாசி, 3. சிவப்புப்பாசி.

மேல்நாடுகளில் பழங்காலத்தில் இருந்தே இந்த கடல்பாசியை, கடல்பாசி உர திரவமாக பயன்படுத்தி வந்துள்ளனர். இந்த கடல் பாசி உரதிரவத்தில், தாவர வளர்ச்சி ஊக்கிகளான ஆக்சிஜன், சைட்டோகைனின், அஸ்கார்பிக் அமிலம், அல்சினிக் அமிலம் மற்றும் முக்கியமாக தழை, மணி, சாம்பல் சத்துக் களும் அயோடின், துத்தநாகம், கால்சியம் மற்றும் கந்தக உப்புகளும் அதிகமாக உள்ளன. இந்த வகையில் உளுந்தில் மகசூலை அதிகரிக்க, கடல்பாசி உரதிரவத் தில் விதைகளை ஊறவைத்து, உலரவைக்கும் முறையிலும் இலைவழி நுண்ணூட்டமாகவும் பயன்படுத்தி ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

தமிழ்நாட்டில் மண்டபம் பகுதிகளில் கடல்பாசிகளான உல்வாலாக்குக்கா டர்பினேரியா கோனாய்ட்ஸ் மற்றும் சர்காசம் பாலி சிஸ்டம் சேகரித்து நீரில் நன்றாக கழுவி, சூரிய ஒளியில் காயவைத்து பின் வெப்ப அறையில் 40 டிகிரி செ. 36 மணி நேரம் வைத்து பொடியாக அரைக்க வேண்டும். இந்த பொடியிலிருந்து 500 கிராம் எடுத்து குலுக்கிவிட வேண்டும். பிறகு மேலே உள்ள திரவத்தை மட்டும் வடிகட்டி எடுத்துவிட்டு, மீதியுள்ள கசடில் 200 மிலி நீர் ஊற்றி, 30 நிமிடங்கள் கொதிக்கவைத்து, ஆறிய பின்னர் வடிகட்ட வேண்டும். இந்த இரண்டு திரவத்தையும் கலக்கி

அதன் 500 மிலி வரும் அளவிற்கு தூய்மையான நீரை ஊற்ற வேண்டும். ஏற்கனவே ஆய்வகத்தில் மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சியின் முடிவிலிருந்து 0.15 சதம் விதை நேர்த்திக்காகவும், 2.5 சதம் இலைவழி நுண்ணூட்டமாகவும் தெளிப்பதற்கு பயன்படுத்தப் பட்டது.

வயல்வெளி ஆராய்ச்சி மதுரை வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் காரீப் மற்றும் ராபி பருவத்தில் மேற்கொள்ளப்பட்டது. உளுந்து வம்பன் 3 விதைகள், தேசிய பயறு வகை ஆராய்ச்சி நிலையத்தில் இருந்து பெறப்பட்டு கடல்பாசி உர திரவத்தில் விதைநேர்த்தி (0.75%) மற்றும் கடல்பாசி உரதிரவத்தை (0.5%) இலைவழி நுண்ணூட்டமாக இளம் பருவம் (15 நாட்களில்) மற்றும் பூக்கும் பருவத்தில் தெளிக்கப்பட்டது (35 நாட்களில்) ஆராய்ச்சியின் போது செடியின் காய்ந்த எடை, இலை பரப்பு குறியீடு செடியின் வளர்ச்சியின் அளவு மொத்த காய்களின் எண்ணிக்கை, எடை ஒரு செடியின் காய்களின் எடை, ஒரு செடியின் விதை மகசூல் கணக்கிடப்பட்டது. செடியின் வளர்ச்சியின் அளவு 40வது மற்றும் 60வது நாளில் கணக்கிடப்பட்டது. மற்ற பண்புகள் அனைத்தும் விதைத்து 60 நாட்களுக்குப் பிறகு கணக்கிடப்பட்டது.

அனைத்து கடல்பாசி உர திரவத்தில் விதைநேர்த்தி மற்றும் இலைவழி நுண்ணூட்டம் கொடுத்த செடிகளில் மகசூல் அதிகமாக இருந்தது. சர்காசம் பாலிசிஸ்டம் கடல்பாசி உரதிரவத்தில் விதைநேர்த்தி மற்றும் இலைவழி நுண்ணூட்டம் கொடுத்த பாத்திகளில் செடியின் வளர்ச்சி மற்றும் மகசூலை அதிகரிக்கும் காரணிகளின் அளவுகள் அதிகமாக இருந்தது கண்டறியப்பட்டது.

தொடர்புக்கு: சுஜாதா, மதுரை. 94437 90200.-கே.சத்தியபிரபா, உடுமலை.

## பாதிக்கப்பட்ட விவசாய பயிர்கள் : வருவாய்த் துறையினர் கணக்கெடுப்பு

பதிவு செய்த நாள் : ஜனவரி 11,2012,01:47 IST

கருத்தை பதிவு செய்ய

காட்டுமன்னார்கோவில் : காட்டுமன்னார்கோவில் பகுதியில் புயலால் பாதிக்கப்பட்ட நெல் வயல்களில் வேளாண் துØறையினரையடுத்து தற்போது வருவாய் துறையினர் கணக்கெடுக்கும் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

"தானே' புயலால் கடலூர் மாவட்டத்தில் கடும் சேதம் ஏற்பட்டது. இவற்றில் நெல் வயல்கள் மற்றும் தோட்டப் பயிர்கள் முற்றிலும் பாதிப்படைந்தன. காட்டுமன்னார்கோவில், குமராட்சி, சிதம்பரம் பகுதியில் நெல் வயல்கள் 100 சதவீதம் முற்றிலும் பாதிக்கப்பட்டு விவசாயிகள் கடும் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர். புயல் பாதிப்பிற்கு பின்பு வேளாண் துறையினர் கணக்கெடுப்பு நடத்தி புள்ளி விவரங்களை கொடுத்துள்ள நிலையில் தற்போது பாதிக்கப்பட்ட விவசாய நிலங்களின் உரிமையாளர்கள் யார் என கணக்கெடுக்கும் பணியில் வருவாய் துறையினர் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.
இவர்கள் அந்தந்த பகுதியில் பாதிக்கப்பட்ட வயல்களுக்கு உரியவர்கள் யார், எவ்வளவு பாதிப்பு என்ற கணக்கெடுத்து புள்ளி கொடுத்த பின்பு இன்னும் 3 நாட்களுக்கு பிறகு நிவாரணம் வழங்கப்படும் என காட்டுமன்னார்கோவில் தாசில்தார் விஸ்வநாதன் தெரிவித்தார்.

**பயிர்களுக்கு இழப்பீடு வழங்க ஊராட்சித் தலைவர்கள் கோரிக்கை**

பதிவு செய்த நாள் : ஜனவரி 11,2012,02:03 IST

சிறுபாக்கம் : புயலால் பாதிக்கப்பட்ட பயிர்களுக்கு உரிய நிவாரணம் வழங்க ஊராட்சித் தலைவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.
மங்களூர் ஒன்றியதில் உள்ள 66 ஊராட்சிகள் மற்றும் 30 துணை கிராமங்களில் அண்மையில் பெய்த கனமழை மற்றும் "தானே' புயலால் தோட்டக்கலை பயிர்களான மரவள்ளி, மஞ்சள், பூக்கள், வாழை, மானாவாரி பயிர்களான பருத்தி, மக்காச்சோளம், உள்ளிட்டவைகள் முற்றிலும் சேதமடைந்தன.
இதனால் சிறு மற்றும் குறு விவசாயிகளின் வாழ்வாதாரம் கேள்விக்குறியாகி உள்ளது. எனவே சேதமடைந்த பயிர்களுக்கு நிவாரண உதவிகளை வழங்கி மாற்றுப் பயிர் செய்திட நடவடிக்கை எடுத்து அரசு வழங்கிய பயிர்க் கடன்களை தள்ளுபடி செய்ய வேண்டும்.
இவ்வாறு ஊராட்சித் தலைவர்கள் வரதராஜன், பெரியசாமி, ரமேஷ், வேலாயுதம், பாக்கியலட்சுமி ராஜேந்திரன், நல்லதம்பி, செங்குட்டுவன் ஆகியோர் அரசுக்கு மனு அனுப்பியுள்ளனர்.

**முந்திரி விவசாயிகளுக்கு உரிய நிவாரணம் வழங்கக் கோரி கடலூரில் ஆர்ப்பாட்டம்**

பதிவு செய்த நாள் : ஜனவரி 11,2012,02:01 IST

கடலூர் : புயலால் பாதிக்கப்பட்ட முந்திரி விவசாயிகளுக்கு உரிய இழப்பீடு வழங்க வலியுறுத்தி கடலூரில் கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம் நடந்தது.

கடலூர் மாவட்டத்தில் "தானே' புயல் தாக்குதலில் முந்திரி, பலா, மா பயிர் செய்யும் விசாயிகள் கடுமையாக பாதிக்கப்பட்டு தங்கள் வாழ்வாதாரங்களை இழந்துள்ளனர். முந்திரி விவசயிகளும், இதை நம்பியுள்ள கூலித் தொழிலாளர்கள் மற்றும் முந்திரி ஏற்றுமதி நிறுவனங்களில் பணியாற்றும் கூலித் தொழிலாளர்கள் எதிர்காலம் கேள்விக்குறியாகியுள்ளது.
புயலால் பாதிக்கப்பட்ட முந்திரி விவசாயிகளுக்கு முறையாக உரிய நிவாரணம் வழங்க வேண்டும் என்பதை வலியுறுத்தி, முந்திரி விவசாயிகள், ஏற்றுமதியாளர்கள் மற்றும் ஏற்றுமதி நிறுவனங்களில் பணியாற்றும் கூலித் தொழிலாளர்கள் சார்பில் நேற்று கடலூர் கலெக்டர் அலுவலகம் முன்பு கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம் நடந்தது. முந்திரி உற்பத்தியாளர் மற்றும் ஏற்றுமதியாளர் சங்கத் தலைவர் ராமகிருஷ்ணன் தலைமை தாங்கினார். மலர்வாசன், பாத்திமாராஜ், ஜெயமூர்த்தி, விஜய் முன்னிலை வகித்தனர்.

பண்ருட்டி எம்.எல்.ஏ., சிவக்கொழுந்து, கடலூர் மாவட்ட வர்த்தக சங்கத் தலைவர் சண்முகம் உட்பட பலர் பேசினர்.
பாதிக்கப்பட்ட முந்திரி விவசாயிகளுக்கு இரண்டரை ஏக்கருக்கு 2 லட்சம் ரூபாய் நிவாரணமும், பலா மரம் இரண்டரை ஏக்கருக்கு ஒரு லட்சம் ரூபாயும் மற்றும் முந்திரி விவசாயிகளுக்கு இலவச முந்திரி கன்றும், அவற்றை பராமரிக்க மூன்று ஆண்டுகளுக்கு ஏக்கர் ஒன்றுக்கு ஆண்டுக்கு 20 ஆயிரம் ரூபாய் வழங்க வேண்டும் என்பது உள்ளிட்ட கோரிக்கைகள் அடங்கிய மனுவை கலெக்டர் அமுதவல்லியிடம் கொடுத்தனர்.

**விதைகளின் தன்மைகளை அறிய பரிசோதனை நிலையத்தை அணுகலாம்**

பதிவு செய்த நாள் : ஜனவரி 11,2012,01:19 IST

கருத்தை பதிவு செய்ய
விழுப்புரம் : விழுப்புரம் விதை பரிசோதனை நிலையத்தில் விதையின் தன்மைகள் பரிசோதிக்கப்படுகிறது. இது குறித்து வேளாண் அலுவலர் ரேவதி விடுத்துள்ள செய்திக் குறிப்பு:

விழுப்புரம் விதை பரிசோதனை நிலையத்தில் விதையின் ஈரப்பதம், புறத் தூய்மை, முளைப்பு திறன் பரிசோதிக்கப்படுகிறது. விதைகளை பரிசோதனைக்கு அனுப்பும் போது ஒரு சுத்தமான பையில் நெல்விதை என்றால் 400 கிராம், மக்காசோளம் ஒரு கிலோ, உளுந்து, பச்சை பயிறு ஆகியவை 100 கிராம், பருத்தி 150 கிராம், கம்பு, ராகி ஆகிய சிறு தானியங்கள் 25 கிராம், நிலக்கடலை ஒரு கிலோ சேகரித்து அனுப்ப வேண்டும்.

ஒரு விதை மாதிரிக்கு 30 ரூபாய் கட்டணம் செலுத்தி பரிசோதனை செய்து கொள்ள வேண்டும். விதை மாதிரியுடன், அதில் மேற்கொள்ள வேண்டிய பகுப்பாய்வுகள் மற்றும் முடிவுகள் அனுப்ப வேண்டிய முகவரியை குறிப்பிட்டு வேளாண்மை அலுவலர், விதை பரிசோதனை நிலை யம், விழுப்புரம் என்ற முகவரிக்கு அனுப்ப வேண் டும். பயிர் வகையை பொறுத்து அனுப்பப்படும் பரிசோதனையின் முடிவுகளில், பகுப்பாய்வு முடிவுகளும் அறிவிக்கப்படும்.
இவ்வாறு வேளாண் அலுவலர் ரேவதி தெரிவித்துள்ளார்.

**கரும்பு விவசாயிகள் சங்கம் தமிழக முதல்வருக்கு மனு**
பதிவு செய்த நாள் : ஜனவரி 11,2012,01:19 IST

கருத்தை பதிவு செய்ய
விழுப்புரம் : கரும்பு டன் ஒன்றுக்கு கூடுதல் விலை அறிவிக்க கோரி தமிழக முதல்வ ருக்கு மனு அனுப்பப்பட்டுள்ளது. இது குறித்து முண்டியம்பாக்கம் கரும்பு விவசாயிகள் சங்க செயலாளர் ஆறுமுகம் அனுப்பியுள்ள மனுவில்:

2011-12ம் ஆண்டுக்கான கரும்பு விலை டன் ஒன்றுக்கு 2100 ரூபாய் தமிழக அரசு அறிவித்துள்ளது விவ சாயிகளுக்கு மன வருத்தத்தை ஏற்படுத்தியுள்ளது. தேர்தல் வாக்குறுதியில் அறிவித்தது போன்று டன் ஒன்றுக்கு 2500 அறிவிப் பீர்கள் என்று விவசாயிகள் எதிர்பார்த்தோம்.

விவசாயத்திற்கு மின்சாரம் பற்றாக்குறை, ரசாயன உர விலை ஏற்றம் மற்றும் தட்டுப்பாட்டால் விவசாயிகள் பெரிதும் அவதிப்பட்டு வருகிறோம். இந்நிலையில் தாங்கள் கூடுதலாக அறிவித்துள்ள 100 ரூபாய் விலை எங்களுக்கு கவலையை ஏற்படுத்தியுள்ளது. இந்நிலை நீடித்தால் விவசாயிகள் கரும்பு நடவு செய்வதில் கேள்விக்குறி ஏற்பட்டுள்ளது. எனவே கரும்புக்கு உண்டான ஆதரவு விலையை மாற்றி கூடுதலாக அறிவிக்க வேண்டும். இவ்வாறு மனுவில் தெரிவித்துள்ளார்.

**நாட்டுக்கோழி பண்ணையாளருக்கு மாதம் தோறும் இலவச பயிற்சி**
பதிவு செய்த நாள் : ஜனவரி 11,2012,02:09 IST

கருத்தை பதிவு செய்ய
சேலம்: நாட்டுக்கோழி பண்ணையாளருக்கு, மாதம்தோறும் இலவச பயிற்சி வழங்கப்படும் என, கால்நடை ஆராய்ச்சி மைய தலைவர் துரைசாமி தெரிவித்தார். சேலத்தில், கால்நடை மருத்துவ பல்கலை பயிற்சி, ஆராய்ச்சி மையம், சுகுணா நிறுவனம் சார்பில் நாட்டுக் கோழி

பண்ணையாளருடன் கலந்துரையாடல் நிகழ்ச்சி நடந்தது. ஆராய்ச்சி மைய தலைவர் துரைசாமி பேசுகையில், ""சேலம், நாமக்கல் மாவட்டத்தில், 300 நாட்டுக்கோழி பண்ணையாளர்கள் உள்ளனர். இவர்கள், நேரடியாக வியாபாரிகளுக்கு கோழிகளை விற்க வேண்டும். அப்போதுதான் லாபம் கிடைக்கும். கடைகளில், ஒரு கிலோ கோழி, 200 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. இதுவே, பண்ணையில் 120 ரூபாய்க்கு கிடைக்கும். கோழிக்கு, ஆறு மாதத்திற்கு ஒருமுறை தடுப்பூசியும், இரண்டு மாதத்திற்கு ஒருமுறை குடற்புழு நீக்குவதும் அவசியம். இதுகுறித்த இலவச பயிற்சி மாதம்தோறும் ஆராய்ச்சி மையத்தில் வழங்கப்படுகிறது. இதற்கு, 0427-2440408 என்ற ஃபோன் நம்பரில் தொடர்பு கொள்ளலாம்,'' என்றார். கால்நடை பராமரிப்புத்துறை முன்னாள் இணை இயக்குநர் ஜெகத் நாராயணன், கால்நடை உணவியல் துறை தலைவர் சந்திரசேகரன், கால்நடை பராமரிப்புத்துறை இணை இயக்குநர் பாலசுப்பிரமணியம், சுகுணா நிறுவன கிளை மேலாளர் செங்கதிர் முருகன் உள்பட பலர் பங்கேற்றனர்.

**மக்காச்சோளம் சாகுபடி விவசாயிகள் அதிக மகசூல் பெற தொழில்நுட்பம்**

பதிவு செய்த நாள் : ஜனவரி 11,2012,01:51 IST

கருத்தை பதிவு செய்ய

நாமக்கல்: "மக்காச்சோளம் சாகுபடி செய்யும் விவசாயிகள், தொழில் நுட்பத்தை பயன்படுத்தி, அதிக மகசூல் பெறலாம்' என, நாமக்கல் வேளாண் உதவி இயக்குனர் செல்வி தெரிவித்துள்ளார். அவர் வெளியிட்டுள்ள அறிக்கை: நாமக்கல் வட்டாரத்தில், தற்போது, 500 ஹெக்டேர் பரப்பளவில், மக்காச்சோளம் பயிர் சாகுபடி பணி துவங்கியுள்ளது. நிலத்தை தயார் செய்யும்போது, கடைசி உழவில் ஒரு ஏக்கருக்கு ஐந்து டன் தொழு உரம் மற்றும் இரண்டு கிலோ அசோஸ்பைரில்லம் கலந்து பரப்பி, நன்கு உழவு செய்ய வேண்டும். மேலும், 60 செ.மீ., இடைவெளியில், 6 மீ., நீளம் கொண்ட பார் அமைக்கவும். அடியுரமாக, 30 கிலோ யூரியா, 150 கிலோ சூப்பர் மற்றும், 33 கிலோ பொட்டாஷ் ஆகியவற்றை பாரில் இடவும். விதைகளை விதைக்கும் முன், ஒரு கிலோ விதைக்கு குளோரிபைரிபாஸ், நான்கு மி.லி., மற்றும் மெட்டலாக்சில் இரண்டு கிராம் கலந்து விதை நேர்த்தி செய்வதால், தண்டுத்துளைப்பான் மற்றும் அடிசாம்பல் நோயை கட்டுப்படுத்தலாம். அதேபோல், 60க்கு 25 செ.மீ., இடைவெளியில், விதைகளை நான்கு செ.மீ., ஆழத்தில் ஊன்றவும். விதைத்து மூன்றாம் நாள், அட்ரசின் என்ற களைக்கொல்லி மருந்தை ஏக்கருக்கு, 500 கி., என்ற அளவில் தெளிப்பதால், களைகளைக் கட்டுப்படுத்தலாம். 40ம் நாள், ஒரு கைக்களை எடுத்தல் வேண்டும். விதைத்த, 25ம் நாள், 60 கிலோ யூரியா மற்றும், 45ம் நாள், 30 கிலோ யூரியாவை மேலுரமாக இட வேண்டும். நுண்ணூட்டச் சத்துப் பற்றாக்குறையால், பயிருக்கு ஏற்படும் பாதிப்புகளைத் தடுக்க விதைத்தவுடன், ஐந்து கிலோ நுண்ணூட்ட சத்துக்கலவையை இடுதல் அவசியம். பயிர் நட்ட, 45 முதல், 65 நாட்களில் போதுமான அளவு நீர் பாய்ச்சுவதால்,

அதிக மகசூல் பெறலாம். 85 முதல், 95வது நாட்களில், தண்ணீரைக் கட்டுப்படுத்துதல், பயிர் முதிர்ச்சி அடைய ஏதுவாகும். கதிரின் மேல்தோல் பழுத்து முதிர்ந்தவுடன் அறுவடைக்கு தயாராகிவிடும். அறுவடை செய்த பின், கதிர்களை சூரிய வெளிச்சத்தில் நன்கு காயவைக்க வேண்டும். மக்காச்சோளம் சாகுபடி செய்யும் விவசாயிகள், தொழில் நுட்பத்தை பயன்படுத்தி அதிக லாபம் பெறலாம். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

**மஞ்சள் ஏலத்தை வியாபாரிகள் புறக்கணிப்பு :ரூ. 2 கோடி வர்த்தகம் முடக்கம்**

பதிவு செய்த நாள் : ஜனவரி 11,2012,02:00 IST

கருத்தை பதிவு செய்ய

ஈரோடு: ஈரோடு ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் அடிப்படை வசதிகளை செய்து தரக் கோரி, மஞ்சள் ஏலத்தை வியபாரிகள் புறக்கணித்ததால், இரண்டு கோடி ரூபாய் வர்த்தகம் ஸ்தம்பித்தது. ஒழுங்குமுறை விற்பனை மையத்தின், மஞ்சள் ஏலக்கூடம், சில ஆண்டுகளுக்கு முன் வரை ஈரோடு சத்தி ரோட்டில் இயங்கி வந்தது. இடப்பற்றாக்குறையால், ஈரோடு - பவானி ரோடு சுண்ணாம்பு ஓடை பகுதிக்கு மாற்றப்பட்டது. இங்கு அடிப்படை வசதிகள் செய்துதரக் கோரி, வியாபாரிகள் வலியுறுத்தினர். இதுவரை நடவடிக்கை எடுக்காததால், ஜன., 9ம் தேதி மஞ்சள் ஏலத்தை வியாபாரிகள் புறக்கணித்தனர். ஏமாற்றம் அடைந்த விவசாயிகள் தாங்கள் கொண்டு வந்த மஞ்சளை குடோன்களிலேயே வைத்து சென்றனர். நேற்று, வணிகர்கள் மற்றும் கிடங்கு உரிமையாளர்கள் சங்க அலுவலகத்தில், விவசாயிகள் மஞ்சளை கொண்டு வந்து ஏலத்துக்கு வைத்திருந்தனர். ஆனால், நேற்று முன்தினம் நடந்த போராட்டத்தை அடுத்து, அதிகாரிகள் யாரும் வெளிமார்க்கெட்டுக்கு டெண்டர் படிக்க வரவில்லை. ஏமாற்றம் அடைந்த வணிகர்கள் ஏலத்தை ஒத்திவைத்தனர்.

சுண்ணாம்பு ஓடையில் உள்ள ஒழுங்கு முறை விற்பனை கூடம் கண்காணிப்பாளர் மணி தலைமையில், அரசு அதிகாரிகள் மற்றும் வியாபாரிகள் இடையே பேச்சுவார்த்தை நடந்தது. "நிலையான ஓர் இடத்தில் மஞ்சள் ஏலம் செயல்படவேண்டும். கழிப்பிட வசதி, ஓய்வுக்கான இட வசதி, மூட்டை இருப்பு வைக்க வசதி தேவை. மஞ்சளை பார்த்து எடுக்க குடோனில் போதிய வெளிச்சம் இல்லை. இவை நிறைவேறும் வரை ஏலத்தில் கலந்து கொள்ள மாட்டோம்' என, வியாபாரிகள் வலியுறுத்தினர். "அடிப்படை வசதிகள் விரைவில் செய்யப்படும்' என அதிகாரிகள் தெரிவித்ததை அடுத்து, போராட்டத்தை வியாபாரிகள் கைவிட்டனர்.

கண்காணிப்பாளர் மணி கூறுகையில், ""நிலையான மஞ்சள் குடோன் கருமாண்டிசெல்லிபாளையம் பகுதியில் கட்டப்பட்டு வருகிறது.

வியாபாரிகளுக்கு தேவையான அனைத்து வசதிகளும் அங்கு செய்து தரப்படும். நாளை (இன்று)

முதல் வழக்கம் போல் மஞ்சள் ஏலம் நடக்கும்," என்றார். ஏலம் புறக்கணிப்பால் இரண்டு கோடி ரூபாய் வரை வர்த்தம் பாதிக்கப்பட்டது.

**விவசாயிகளுக்கு இயற்கை வேளாண் பயிற்சி**

பதிவு செய்த நாள் : ஜனவரி 11,2012,02:00 IST

ஈரோடு: இயற்கை வேளாண்மை குறித்து விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது. தேசிய வேளாண் வளர்ச்சி திட்டத்தின் கீழ், ஈரோடு தாலுகா அளவிலான விவசாயிகளுக்கு, இயற்கை வேளாண்மை பற்றிய பயிற்சி, திண்டல் வேளாண் உதவி இயக்குனர் அலுவலகத்தில் நடந்தது. துணை இயக்குனர் மாரியப்பன் பயிற்சியை துவக்கி வைத்து, விவசாயிகளுக்கு வழங்கப்படும் மானியங்கள் குறித்து பேசினார். பவானிசாகர் வேளாண் ஆராய்ச்சி நிலையத்தை சேர்ந்த உதவி பேராசிரியர் மாரிமுத்து, மண்புழு உரம் தயாரிப்பு, பஞ்சகவ்யம் தயாரிப்பு, இயற்கை முறையில் பூச்சிகளை கட்டுப்படுத்துதல் பற்றியும், அங்கக சான்றளிப்பு பற்றியும் விவசாயிகளுக்கு பயிற்சி அளித்தார். வேளாண் உதவி இயக்குனர் சிதம்பரம், மண் வளம் பாதுகாப்பு, உயிரியல் காரணிகள் உபயோகம், பயிர் சுழற்சி பற்றி விளக்கமளித்தார். வேளாண் அலுவலர் சியாம்சுந்தர், மண் மாதிரி மற்றும் பாசன நீர் ஆய்வு பற்றி கூறினார். விவசாயிகளுக்கு இயற்கை வேளாண் பொருட்கள் ஏற்றுமதி குறித்து எடுத்துரைக்கப்பட்டது.

**நிலக் கடலை சாகுபடியில் களை எடுக்கும் பணி தீவிரம்**

பதிவு செய்த நாள் : ஜனவரி 11,2012,02:00 IST

கருத்தை பதிவு செய்ய

ஈரோடு : ஈரோடு, சோளங்காபாளையம் பகுதியில் நிலக்கடலை பயிரில் களை எடுக்கும் பணி தீவிரமாக நடந்து வருகிறது. கணபதிபாளையம், புஞ்சை காளமங்கலம், சோளங்காபாயைம், ஊஞ்சலூர், காரணாம்பாளையம் மலையம்பாளையம் உள்ளிட்ட பகுதியில், சமையல் எண்ணெய்க்காகவும், விதைக்காவும் நாட்டு நிலக் கடலை அதிக பரப்பளவில் சாகுபடி செய்துள்ளனர். குறைந்த மாதத்தில், குறைவான செலவில், நல்ல லாபம் கிடைப்பதால், மஞ்சள், கரும்பு சாகுபடி நடந்த விளைநிலங்களில், நிலக் கடலை சாகுபடியாக மாறி வருகிறது. கார்த்திகை மாதம் விதையிடப்பட்ட நாட்டுக் கடலை, மூன்று மாதங்களில் அறுவடை செய்யப்படுகிறது. இடைப்பட்ட காலங்களில், செடிகள் நல்ல ஊட்டமாகவும், செழிப்பாகவும் வளர, உரம் செழித்து, ஆக்கிரமித்துள்ள புற்களை வெட்டி எடுக்கின்றனர். இதனால், மண் கலப்பதுடன், மேல்பகுதியில் உள்ள உரங்கள், வேர்ப்பகுதிக்கு சென்று நல்ல சத்தை கொடுக்கிறது. இதுபோல் மூன்று மாதத்தில், மூன்று முறை களை எடுக்கும் பணி மேற்கொள்ளப்படுகிறது. தை மாதம் இறுதியில் அறுவடை சீஸன் துவங்குவதால், விவசாயிகள் பராமரிப்பு பணிகளில் தீவிரமாக உள்ளனர்.

சோளங்காபாளையம் விவசாயி கண்ணம்மாள் கூறியதாவது: கார்த்திகை மாதம் நாட்டு நிலக்கடலை விதையிடப்பட்டது. மார்கழி மாதம் இறுதியில் முதற்கட்டமாகவும், தற்போது, இரண்டாம் கட்டமாகவும் களை எடுக்கும் பணி நடக்கிறது. செலவிடும் பணத்தை மூன்று மாதத்தில் எடுத்து விடலாம். மஞ்சள், கரும்பு பயிரை தவிர்த்து, நிலக்கடலை சாகுபடி செய்துள்ளோம். தை மாதம் இறுதியில் கடலை அறுவடை துவங்கும். தோட்ட வேலைக்கு ஆட்கள் கிடைப்பதே பெரும் சிரமமாக உள்ளது. ஒரு ஆளுக்கு 100 ரூபாய் கூலி கொடுத்தால் மட்டுமே வேலைக்கு வருகின்றனர். இவ்வாறு அவர் கூறினார்.

**எண்ணெய் விலை கூடியது**

பதிவு செய்த நாள் : ஜனவரி 11,2012,00:04 IST

மதுரை : நிலக்கடலை உற்பத்தி குறைந்து, வரத்து குறைந்ததால், மதுரையில் கடலை எண்ணெய் விலை லிட்டருக்கு ரூ.3 அதிகரித்துள்ளது.
எண்ணெய் வியாபாரிகள் சங்க நிர்வாகி கிருஷ்ணமூர்த்தி கூறியதாவது : ஒரு மாதத்தில் கடலை எண்ணெய் விலை லிட்டருக்கு ரூ.10 அதிகரித்தது. டிசம்பரில் ரூ.86க்கு விற்ற ஒரு லிட்டர், நேற்று ரூ.96க்கு விற்கப்பட்டது. பாமாயில் ரூ.63லிருந்து ரூ.62, தேங்காய் எண்ணெய் ரூ.95லிருந்து ரூ.93க்கு விற்கப்பட்டது. சூரியகாந்தி எண்ணெய் ரூ.76, நல்லெண்ணெய் ரூ.130, தும்பை நல்லெண்ணெய் ரூ.145, வனஸ்பதி ரூ.62, ரைஸ்பிரான் ஆயில் ரூ.72 என்பதில் மாற்றமில்லை, என்றார்.

**திசு வாழைக்கு 50 சதவீத மானியம்**

பதிவு செய்த நாள் : ஜனவரி 10,2012,23:55 IST

திண்டுக்கல் : திசுவாழை பயிரிட, விவசாயிகளுக்கு 50 சதவீத மானியம் வழங்கப்படுகிறது.வாழை உற்பத்தியில் இந்திய முதலிடம் வகித்தாலும், திறன் மிகவும் குறைவாக உள்ளது. வாழையில் அதிக மகசூல் பெற, திசுவாழை கன்றுகள் சாகுபடி செய்ய வேண்டும். இவை வேகமாக அறுவடைக்கும் தயாராகும். தோட்டக்கலை இயக்கம் மூலம், திசுவாழைக்கு மானியம் வழங்கப்படுகிறது.

ஆத்தூர் பகுதியில் 30 எக்டேரில், திசுவாழை சாகுபடி செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. ஒரு விவசாயிக்கு 31 ஆயிரத்து 202 ரூபாய் மானியம் வழங்கப்படும். ஒருவர் அதிகபட்சமாக 4 எக்டேர் வரை மானியம் பெறலாம். விபரங்களுக்கு, "94434 27042, 94420 91115' என்ற எண்களில் தொடர்பு கொள்ளலாம் என, உதவி இயக்குனர் ஹெடிபாய் தெரிவித்தார்.

**மானியத்தில் இடுபொருட்கள்**

பதிவு செய்த நாள் : ஜனவரி 10,2012,23:55 IST

கருத்தை பதிவு செய்ய

வடமதுரை : வடமதுரையில், தை பட்டத்திற்காக, மானிய விலையில் இடுபொருட்கள் வழங்கப்படுகின்றன. வேளாண் உதவி இயக்குனர் பாஸ்கரன் கூறியதாவது: வடமதுரை வட்டாரத்தில் ஜிங்க் சல்பேட் உரம் மானியத்தில் வழங்கப்படுகிறது. 50 சதவீத மானியத்தில் தரச்சான்று பெற்ற ஐ.சி.எம்.வி., 221 புதிய கம்பு, வி.பி.என்., உளுந்து, கோ.சி.பி.எல்., தட்டை பயிறு விதைகளும் வினியோகம் செய்யப்படுகிறது. உகந்த விதைகளை மானியத்துடன் பெறலாம், என்றார்.

**இயந்திரம் மூலம் நெல் நடவு**

பதிவு செய்த நாள் : ஜனவரி 10,2012,22:30 IST

கருத்தை பதிவு செய்ய

பரமக்குடி : ராமநாதபுரம் பெருங்கரை கிராமத்தில் திருந்திய நெல் சாகுபடியினை அமைச்சர் சுந்தரராஜ் நடவு இயந்திரத்தின் மூலம் துவக்கி வைத்தார். மேலும் தேசிய உணவு பாதுகாப்பு இயக்கத்தில் பத்தாயிரம் ரூபாய் மானியத்தில் விவசாயிகளுக்கு ஆயில் எஞ்சின், கைத்தெளிப்பா ன்கள் வழங்கப்பட்டது.

வேளாண்மை இணை இயக்குனர் ராஜேந்திரன், துணை இயக்குனர் சக்திமோகன், உதவி இயக்குனர் வன்னியராஜன்.

அலுவலர் அம்பேத்குமார், வரதராஜன், கந்தசாமி உட்பட பலர் பங்கேற்றனர். கண்ணையா நன்றி கூறினார்.

**வெங்காயம் விலை வீழ்ச்சி : விவசாயிகள் கண்ணீர்**

பதிவு செய்த நாள் : ஜனவரி 10,2012,23:51 IST

கருத்தை பதிவு செய்ய

சாத்தூர் : சாத்தூர் பகுதியில் வெங்காயத்திற்கு போதுமான விலை கிடைக்காததால் விவசாயிகள் தவிக்கின்றனர். சாத்தூர் சுற்று பகுதிகளில் விவசாயிகள் சின்ன வெங்காயம், பல்லாரி பயிர் செய்துள்ளனர். தற்போது அறுவடை சீசன் களை கட்டியுள்ளது. வெங்காய உற்பத்தி அதிகரித்துள்ளது.

இதனால் வெங்காயத்தின் விலையும் குறைந்துள்ளது. வெங்காயம் பயிர் செய்துள்ள விவசாயிகள் வேதனை அடைந்துள்ளனர். நான்கு மாதத்திற்கு முன்பு ஒரு கிலோ ரூ.25 முதல் ரூ.30 வரை விலை போனது. தற்போது ஒரு கிலோ நான்கு முதல் ஏழு ரூபாய் வரையும், பல்லாரி கிலோ ரூ. 8 முதல் ரூ.12 வரை விலை போகிறது. விலை வீழச்சி காரணமாக வெங்காய உற்பத்தி செலவு கூட கிடைக்காத நிலை ஏற்பட்டுள்ளது. ஒரு மூடை வெங்காயம் உற்பத்திக்கு, வண்டி வாடகை,அறுப்புக்கான ஆள் கூலி உட்பட ரூ.250 வரை செலவாகிறது.

கட்டுப்படியாகாத விலையகங் ரூபாய்க்கு எட்டு காசு கமிஷன் வேறு வியாபாரிகளுக்கு கொடுத்து, வெங்காயத்தை விற்று நஷ்டத்தோடு திரும்புகின்றனர். விவசாயி ஒருவர் கூறுகையில்,""வெங்காயம் உற்பத்தி அதிகரித்துள்ளது. விலை இல்லாததால் நஷ்டத்தை சந்தித்து வருகிறோம். தகுந்த விலை கிடைக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்." என்றார்.

**தக்காளி, கத்தரி விலை குறைவு; எண்ணெய் விலை அதிகரிப்பு**

பதிவு செய்த நாள் : ஜனவரி 10,2012,22:10 IST

கருத்தை பதிவு செய்ய

திருப்பூர் : திருப்பூர் வடக்கு உழவர் சந்தைக்கு வரத்து அதிகரித்துள்ளதால், தக்காளி, கத்தரி விலை குறைய துவங்கியுள்ளது. எண்ணெய் வித்து உற்பத்தி பாதிப்பால், கடலை எண்ணெய் விலை ஏற்றம் பெற்று வருகிறது. நேற்றைய மார்க்கெட் நிலவரம்:வரத்து அதிகரித்துள்ளதால், திருப்பூர் வடக்கு உழவர் சந்தையில் தக்காளி, கத்தரி கிலோவுக்கு நான்கு ரூபாய் வரை விலை குறைந்துள்ளது. கடந்த வாரம் வரை, கிலோ 10 ரூபாயாக இருந்த தக்காளி, நேற்று மூன்று ரூபாய் குறைந்து ரூ.7; 24 ரூபாயாக இருந்த கத்தரி நான்கு ரூபாய் குறைந்து 20 ரூபாயாகவிற்கப்பட்டது. வெண்டை 24; சின்ன வெங்காயம் 15; பெரிய வெங்காயம் 11; பீர்க்கன் 30; அரசாணி, பூசணி 10 ரூபாய்; கொத்தமல்லி 10; கீரை 20 ரூபாய்; காரட் 30; உருளைக்கிழங்கு 16; மொச்சை 22; அவரை 25 ரூபாய்; புடலை 16; பாகல் 22; முட்டைகோஸ் 16 ரூபாய் என விற்கப்பட்டது.உழவர் சந்தை நிர்வாகஅலுவலர் ராதாகிருஷ்ணன் கூறுகையில், ""பெருமாநல்லூர், அவிநாசி, பூலுவப்பட்டி பகுதிகளில் இருந்து சந்தைக்கு வழக்கமாக ஐந்து டன் வரை தக்காளி; மூன்று டன் கத்தரி வரத்து இருந்தது. பனிப்பொழிவு குறைந்து காய்கள் சேதமடைவது குறைந்துள்ளதால், வரத்து அதிகரித்துள்ளது; தக்காளி ஆறு டன்; கத்தரி 4.5 டன் வரத்துள்ளது. இதனால், தக்காளி, கத்தரி விலை குறையத் துவங்கியுள்ளது," என்றார்.கடலை எண்ணெய் விலை ஏற்றம்: எண்ணெய் வித்து உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளதால், கடலை எண்ணெய் விலை ஏற்றம் பெற துவங்கியுள்ளது. கடந்த வாரம் வரை, 102 ரூபாயாக இருந்த கடலை எண்ணெய் கிலோ 110 ரூபாயாக விலை


உயர்ந்துள்ளது.தேங்காய் எண்ணெய் (கிலோ) ரூ.100; நல்லெண்ணெய் 100; பாமாயில் 69; ரீபைண்ட் ஆயில் 122; கடலை எண்ணெய் 110; சன் பிளவர் ஆயில் 88; விளக்கெண்ணெய் 100 ரூபாய்க்கு விற்பனையாகிறது.எண்ணெய் வியாபாரிகள் கூறுகையில், "குளிர் அதிகரித்துள்ளதால், ஈரோடு, கரூர், காங்கயம் பகுதிகளில் உற்பத்தி பாதிக்கப்பட்டு, கடலை எண்ணெய் வரத்து குறைந்துள்ளது. தற்போது கடலை எண்ணெய் கிலோவுக்கு எட்டு ரூபாய் விலை உயர்ந்துள்ளது; மற்ற எண்ணெய் விலையும் படிப்படியாக உயரும்,' என்றனர்.மல்லிகை பூ விலை ஏற்றம்: மார்க்கெட்டுக்கு வரத்து 400 கிலோவாக குறைந்துள்ளதால், மல்லிகை பூ விலை ஏற்றம் பெறத்துவங்கியுள்ளது; 200 ரூபாயாக இருந்த மல்லிகை பூ, ஒரே வாரத்தில், கிலோவுக்கு ரூ.150 அதிகரித்துள்ளது. மல்லிகை (கிலோ) 320; ஜாதிப்பூ 240; அரளி 60; சம்பங்கி 40; செவ்வந்தி 50; பட்டுப்பூ 50; மாலை (பெரியது) 120, சிறியது 40 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டது.பூ மார்க்கெட் வியாபாரிகள் சங்க செயலாளர் சக்திவேல் கூறியதாவது:மார்கழி மாதம் துவக்கத்தில் கிலோ 600 ரூபாயாக இருந்த மல்லிகை பூ, வரத்து அதிகரித்ததால் விலை படிப்படியாக குறைந்து கடந்த வாரம் 200 ரூபாயாக இருந்தது. தென்மாவட்டங்களில் அதிக பனிப்பொழிவு காரணமாக, மீண்டும் மல்லிகை வரத்து குறைந்துள்ளது; 400 கிலோ மட்டுமே மல்லிகை வரத்தாக உள்ளது. இதனால், மார்க்கெட்டில் மல்லிகை விலை மீண்டும் ஏற்றம் பெற்று வருகிறது. பொங்கல் சிறப்பு தினங்கள் முடியும் வரை, பூக்கள் விலை குறைய வாய்ப்பு இல்லை, என்றார்.

---

தினகரன்

**பென்னாகரம் சந்தையில் ஒரே நாளில் 25 ஆயிரம் ஆடுகள் விற்பனை**

பதிவு செய்த நாள் : 1/11/2012 12:16:33 AM



பென்னாகரம் : பொங்கலை முன்னிட்டு ஒரே நாளில் 25 ஆயிரம் ஆடுகள் விற்பனையாகின. கால்நடை வளர்ப்பில் முக்கியத்துவம் பெற்ற தர்மபுரி மாவட்டம் பென்னாகரத்தில்

பொங்கலையொட்டி வெள்ளாடு விற்பனை களை கட்டியுள்ளது. பென்னாகரத்தில் நேற்று வாரச்சந்தை கூடியது. பொங்கலுக்கு முந்தைய சந்தை என்பதால் அதிகளவில் ஆடுகள் விற்பனைக்கு கொண்டுவரப்பட்டன. கடந்த வாரங்களில் சுமார் 2 ஆயிரம் ஆடுகள் விற்பனைக்கு வந்தன.

ஆனால் நேற்று 30 ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஆடுகள் விற்பனைக்கு கொண்டு வரப்பட்டிருந்தன. பெங்களூரில் இருந்து வியாபாரிகள் அதிகம் வந்திருந்தனர். மேலும் சென்னை, வேலூர், சேலம், ஈரோடு ஆகிய இடங்களில் இருந்தும் டெம்போ, லாரிகளில் வியாபாரிகள் வந்து ஆடுகளை வாங்கிச் சென்றனர். ஒரு ஆடு ஸி4 ஆயிரம் முதல் ரூ.7,500 வரை விற்பனையானது. கடந்த வாரத்தை விட ஒரு ஆட்டிற்கு சுமார் ரூ.1000 விலை அதிகரித்துள்ளது. இதனால் ஆடு வளர்ப்பவர்கள் மகிழ்ச்சியடைந்தனர்.

இதுகுறித்து ஆட்டு வியாபாரியும், ஒகேனக்கல் முன்னாள் பஞ்சாயத்து தலைவருமான மாதையன் கூறியதாவது: பென்னாகரத்தில் நடக்கும் ஆட்டுச் சந்தை மிகவும் பிரபலமானது.

பெங்கலையொட்டி நேற்று ஒரே நாளில் மட்டும் 25 ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஆடுகள் விற்பனையாகின.

இவ்வாறு மாதையன் கூறினார்.

பொங்கலுக்கு முந்தைய சந்தை என்பதால் அதிகளவில் ஆடுகள் விற்பனைக்கு கொண்டுவரப்பட்டன.

பெங்களூர், சென்னை, வேலூர், சேலம், ஈரோடு ஆகிய இடங்களில் இருந்து டெம்போ, லாரிகளில் வியாபாரிகள் ஆடுகளை வாங்கிச் சென்றனர்.ஒரு ஆடு ரூ.4 ஆயிரம் முதல் ரூ.7,500 வரை விற்பனையானது.

---

தினத்தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்

## *42 சதவீத குழந்தைகள் எடை குறைவாக உள்ளனர் ஊட்டச்சத்து குறைபாடு குறித்து தேசிய அளவில் விழிப்புணர்வு முகாம் மன்மோகன்சிங் அறிவிப்பு*

*புதுடெல்லி, ஜன.11–*

*நாட்டில் 42 சதவீத குழந்தைகள் எடை குறைவாக இருப்பது தேசிய அவமானம் என்று குறிப்பிட்ட பிரதமர் மன்மோகன்சிங், ஊட்டச்சத்து குறைபாடு குறித்து தேசிய அளவில் விழிப்புணர்வு முகாம் நடத்தப்படும் என்று அறிவித்தார்.*

*42 சதவீத குழந்தைகள்*

ஊட்டச்சத்து குறைபாட்டுக்கு எதிரான குடிமக்கள் கூட்டமைப்பில், இளம் எம்.பி.க்கள், கலைஞர்கள், சமூக ஆர்வலர்கள், கொள்கை வகுப்பாளர்கள் ஆகியோர் இடம் பெற்றுள்ளனர். இந்த அமைப்பின் முயற்சியினால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் அடிப்படையில் பட்டினி மற்றும் ஊட்டச்சத்து குறைபாடு குறித்த அறிக்கை தயாரிக்கப்பட்டது. ஊட்டச்சத்து குறைபாடு காரணமாக, நாட்டில் எடை குறைவான குழந்தைகள் கடந்த 7 ஆண்டுகளில் 52 சதவீதத்தில் இருந்து 42 சதவீதமாக குறைந்திருப்பதாக அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டு உள்ளது. குறிப்பிட்ட 100 மாவட்டங்களில், ஊட்டச்சத்து குறைவாக உள்ள குழந்தைகள் 40 சதவீதத்துக்கு அதிகமாக இருப்பதும், 60 சதவீத குழந்தைகள் வளர்ச்சி குன்றி இருப்பதும் தெரிய வந்துள்ளது.

தேசிய அவமானம்

டெல்லியில் பிரதமர் இல்லத்தில் நேற்று நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில், பிரதமர் மன்மோகன்சிங் இந்த அறிக்கையை வெளியிட்டு பேசினார். அப்போது அவர் கூறியதாவது–

வளர்ச்சிவிகிதம் அதிகரித்துவரும் ஒரு நாட்டில் 42 சதவீத குழந்தைகள் எடை குறைவாக இருப்பது தேசிய அவமானம். ஊட்டச்சத்து குறைபாட்டை குறைப்பதற்கு மேற்கொண்ட முயற்சியில் நாம் வெற்றி பெறவில்லை.ஊட்டச்சத்து குறைபாட்டை போக்குவதற்கு ஒருங்கிணைந்த குழந்தைகள் அபிவிருத்தி திட்டத்தை மட்டுமே நம்பி இருக்க முடியாது. கொள்கைகளை வகுப்பவர்களும், திட்டங்களை அமல்படுத்துகிறவர்களும் கல்வி மற்றும் சுகாதாரம், குடிதண்ணீர் மற்றும் ஊட்டச்சத்து போன்றவை ஒன்றுடன் ஒன்று தொடர்புடையதாக இருப்பதை புரிந்துகொண்டு அதன் அடிப்படையில் திட்டங்களை உருவாக்க வேண்டும்.

தேசிய விழிப்புணர்வு முகாம்

42 சதவீத குழந்தைகள் இன்னமும் எடை குறைவாக இருப்பது மிகவும் கவலை அளிக்கிறது. இதை போக்குவதற்காக ஒருங்கிணைந்த குழந்தைகள் அபிவிருத்தி திட்டத்தை வலுப்படுத்தி மாற்றியமைப்பது குறித்து நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. ஊட்டச்சத்து குறைபாடு அதிகம் உள்ள 200 மாவட்டங்களை தெரிவு செய்து அங்கு பலமுனை திட்டங்கள் அமல்படுத்தப்படும். அத்துடன் தேசிய அளவில் ஊட்டச் சத்து குறைபாடு குறித்து விழிப்புணர்வு முகாம்கள் நடத்தப்படும். கடந்த 20 ஆண்டுகளில் பல்வேறு துறைகளில் இந்தியா சிறப்பான வளர்ச்சி கண்டுள்ளது. ஆனால், ஊட்டச்சத்து குறைபாட்டை களைவதில் போதிய முன்னேற்றம் ஏற்படவில்லை. ஒடிசா, மத்திய பிரதேசம் மற்றும் ராஜஸ்தான் ஆகிய மாநிலங்களில் 3

*ஊராட்சி ஒன்றியங்களை தத்து எடுத்து, ஊட்டச்சத்து குறைபாட்டை விரைந்து போக்குவதற்கான நடவடிக்கைகள் கூட்டமைப்பு சார்பில் மேற்கொள்ளப்படும். இவ்வாறு மன்மோகன்சிங் கூறினார்.*

*மத்திய மந்திரி சச்சின்பைலட், திரைப்பட தயாரிப்பாளரும் எம்.பி.யுமான ஷியாம் பெனகல், நடிகர் ராகுல் போஸ் உள்ளிட்ட பலர் இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.*

## *6 இடங்களில் துளையிட்டு உறுதித்தன்மையை அறிய முல்லைப்பெரியாறு அணையில் ஆய்வு பணிகள் தீவிரம் விஞ்ஞானிகள் நேரில் பார்வையிட்டனர்*



முல்லைப்பெரியாறு அணையில் துளையிடும் பணிகளை பார்வையிட வந்த மத்திய மண் மற்றும் மூலப்பொருட்கள் ஆராய்ச்சி நிலைய விஞ்ஞானிகள் பங்கஜ் சர்மா, வி.நெகுரே ஆகியோர் அணைக்கு செல்வதற்காக தேக்கடிக்கு வந்த போது எடுத்தபடம்.

*குமுளி, ஜன.11–*

*முல்லைப்பெரியாறு அணையில் 6 இடங்களில் துளையிட்டு ஆய்வு செய்யும் பணிகள் தீவிரமாக நடந்து வருகிறது. இந்த பணிகளை விஞ்ஞானிகள் நேற்று பார்வையிட்டு ஆய்வு செய்தனர்.*

*முல்லைப்பெரியாறு அணை*

*தமிழ்நாட்டில் தென்மாவட்ட விவசாயிகள் நீர்ப்பாசன வசதி பெற்று வரும் முல்லைப்பெரியாறு அணை பிரச்சினையில் தமிழகம்–கேரளவுக்கு இடையே நீண்ட காலமாக மோதல் இருந்து வருகிறது. இதுதொடர்பான வழக்கு சுப்ரீம் கோர்ட்டில் இருந்து வருகிறது. இந்த பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்காக 5 உறுப்பினர்களை*

கொண்ட உயர் அதிகார குழு ஒன்றை சுப்ரீம் கோர்ட்டு நியமித்தது. ஓய்வு பெற்ற சுப்ரீம் கோர்ட்டு நீதிபதி ஏ.எஸ்.ஆனந்த் தலைமையில் அமைக்கப்பட்டுள்ள இந்த குழுவில் இருமாநில பிரதிநிதிகளும் இடம் பெற்றுள்ளனர். இந்த ஐவர் குழுவினர் முல்லைப்பெரியாறு அணையில் கடந்த மாதம் நேரில் சென்று ஆய்வு செய்தனர்.

உறுதித்தன்மை ஆய்வு

அப்போது அணையின் உறுதித்தன்மையை அறிவதற்காக அணையில் சில இடங்களில் துளையிட்டு, அணை கட்ட பயன்படுத்திய மண், சுண்ணாம்பு மற்றும் கலவைகளை எடுத்து ஆய்வு செய்ய வேண்டும் என்று கேரள அரசு தரப்பில் கூறப்பட்டது. இதனால் முல்லைப்பெரியாறு அணை மற்றும் முல்லைப்பெரியாறு பேபி அணையில் 5 இடங்களில் துளையிட்டு ஆய்வு மண் மாதிரி எடுக்க முடிவு செய்யப்பட்டது. இதையடுத்து 1200 அடி நீளம் கொண்ட முல்லைப்பெரியாறு அணையில் 330, 475, 650, 780, 950 அடி என 5 இடங்களிலும், 240 அடி நீளம் கொண்ட பேபி அணையின் மையப்பகுதியிலும் சேர்த்து மொத்தம் 6 இடங்களில் துளையிடுவதற்காக இடங்கள் தேர்வு செய்யப்பட்டன. இந்த பணிகளுக்காக 2 ராட்சத இயந்திரங்கள் அணைக்கு கொண்டு செல்லப்பட்டன. இதில் ஒரு இயந்திரம் 75 மில்லிமீட்டர் விட்டம் அளவிலும், மற்றொரு இயந்திரம் 150 மில்லிமீட்டர் விட்டம் அளவிலும் துளையிடும் திறன் கொண்டது ஆகும்.

துளையிடும் பணிகள் தீவிரம்

அணையில் துளையிடும் பணி கடந்த 4–ந்தேதி மாலையில் தொடங்கி நடந்து வருகிறது. துளையிட தேர்வு செய்யப்பட்ட இடங்களில் 475, 780 அடிகளில் துணையிடும் பணிகள் தொடங்கியது. முதற்கட்டமாக 2 இயந்திரங்கள் மூலமும் 75 மில்லிமீட்டர் விட்டத்தில் துளையிடப்பட்டு வருகிறது. நேற்று வரை 2 இடங்களிலும் சுமார் 60 அடி வரை துளையிடப்பட்டுள்ளது.

விஞ்ஞானிகள் ஆய்வு

இந்த பணிகளை பார்வையிடுவதற்காக மத்திய மண்வள மற்றும் நீர் ஆராய்ச்சி மைய இயக்குனர் தேசாய் முல்லைப்பெரியாறு அணைக்கு நேற்று வந்தார். இதற்காக நேற்று காலை 7.30 மணியளவில் தேக்கடிக்கு வந்த தேசாய் அங்கிருந்த படகு மூலம் அணைக்கு சென்றார். அவருடன் தமிழக முதன்மை பொறியாளர் ராஜேஸ், பொறியாளர் ராஜகோபால், உதவி பொறியாளர் கல்யாண சுந்தரம் ஆகியோர் உடன் சென்றனர்.

மேலும் டெல்லியில் உள்ள மத்திய மண் மற்றும் மூலப்பொருட்கள் ஆராய்ச்சி நிலைய

விஞ்ஞானிகள் பங்கஜ் சர்மா, வி.நெகுரே ஆகியோரும் அணையை பார்வையிட நேற்று பகல் 12 மணியளில் தேக்கடியில் இருந்து படகு மூலம் அணைக்கு சென்றனர். அவர்களுடன் கேரள அணை பாதுகாப்பு தலைவர் எம்.கே.பரமசிவம் நாயர், பொறியாளர்கள் லத்திகா, டோமி ஜார்ஜ் ஆகியோர் சென்றனர்.

அணைக்கு சென்ற இந்த குழுவினர் துளையிட்டு கட்டிடக்கலவையை எடுத்து வரும் பணிகளை பார்வையிட்டனர்.

22–ந்தேதிக்குள் அறிக்கை தாக்கல்

கட்டிடக் கலவையை புனேயில் உள்ள ஆய்வகத்தில் சோதனை செய்து அணையின் உறுதித் தன்மை குறித்த அறிக்கை அடுத்த மாதம் 22–ந்தேதிக்குள் சுப்ரீம் கோர்ட்டில் சமர்ப்பிக்கப்படுகிறது. பணிகள் தொடர்ந்து நடந்து வருவதால் பணிகள் முடியும் வரை தேசாய் தேக்கடி பகுதியிலேயே தங்கி இருந்து பணிகளை பார்வையிடுகிறார்.

## தேயிலையின் தேவை அதிகரித்துள்ளதால் பச்சை தேயிலை விலை உயர்வு வார விலையாக ரூ.9.50 நிர்ணயம்

குன்னூர், ஜன.11–

பச்சை தேயிலைக்கு வார விலை ரூ.9.50 என்று நிர்ணயிக்கப்பட்டு, விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு உள்ளது.

சிறு விவசாயிகள்

நீலகிரி மாவட்டத்தில் 60 ஆயிரம் சிறு விவசாயிகள் தேயிலை விவசாயத்தில் ஈடு பட்டு வருகின்றனர். இதில் நூற்றுக்கும் மேற்பட்ட சிறு தேயிலை தொழிற்சாலைகள் சிறு விவசாயிகளிடம் இருந்து பச்சை தேயிலையை பெற்று, தேயிலை தூள் தயாரித்து வருகின்றனர். வாரந்தோறும் வியாழன், வெள்ளிஆகிய நாட்களில் நடைபெறும் தேயிலை ஏலத்தில் விற்பனையாகும் தேயிலை தூளின் விற்பனை விலையை கருத்தில் கொண்டு விவசாயிகளுக்கு வார விலை வழங்கப்பட்டு வருகிறது.இவ்வாறு வழங்கப்படும் வார விலையில் ஏ பிரிவு, பி பிளஸ் பிரிவு, சாதாரண பிரிவு என மூன்று வகையாக பச்சை தேயிலை பிரிக்கப்பட்டு, விலை வழங்கப்பட்டு வரு கிறது.

மகசூல் குறைவு

தற்போது நீலகிரி மாவட்டத் தில் மாறி வரும் சீதோஷ்ண நிலை மாற்றம் காரணமாக தேயிலை மகசூல் குறைந்துள் ளது. கடந்த நவம்பர் மற்றும் டிசம்பர் மாதங்களில் நிலவிய மேக மூட்டத்தின் காரணமாக வும், அதன் பின்னர் ஏற்பட்ட பனிப்பொழிவின் காரணமாக வும் தேயிலை செடிகளுக்கு தேவையான சூரியஒளி கிடைக்காததால் தேயிலை செடிகளில் உள்ள

அரும்புகள் வளர முடியாத நிலையில் உள்ளது. சூரிய ஒளி சரியான முறையில் கிடைக் காததால், செடியில் உள்ள ஓரிரு அரும்பு களும், வஞ்சி கொழுந்துகளாக மாறி உள்ளன. தேயிலை தூள் மகசூல் குறைவின் காரணமாக தேயிலை தூள் உற்பத்தியும் வெகுவாக குறைந்துள்ளது.

வட மாநிலங்களில் தற்போது ஏற்பட்டுள்ள கடும் பனிப்பொழிவின் காரணமாக வட மாநில தேயிலை உற்பத்தி யும் கடுமையாக பாதிக்கப்பட்டு உள்ளது. இதன் காரணமாக வட மாநில ஏலத்தை நம்பி இருந்த வர்த்தர்கள் கவனம் தென்னிந்திய தேயிலையை நோக்கி திரும்பி உள்ளது.

விலை உயர்வு

இதன் காரணமாக குன்னூர் தேயிலை ஏல மையத்தில் தேயிலை தூளுக்கு தேவை அதிகரித்து உள்ளது. தேவை அதிகரித்த காரணத்தால், தேயிலை தூளுக்கு விலை உயர்வு ஏற்பட்டு உள்ளது.இந்த விலை உயர்வு தாக்கத்தின் காரணமாக பச்சை தேயிலை யின் விலையும் கூடி உள்ளது. கடந்த மாதங்களில் 8 ரூபாய் என்று இருந்த சாதாரண வகை பச்சை தேயிலை கடந்த 7–ந் தேதி ஒரு ரூபாய் உயர்ந்து, ரூ.9 என்றும், ரூ. 9.50 என்றும் நிர்ணயிக்கப்பட்டு, விவசாயி களுக்கு வார விலையாக வழங்கப் பட்டது. ‘பி பிளஸ்’ பிரிவுக்கு ரூ.16 என்றும், ‘ஏ’ பிரிவு பச்சை தேயிலைக்கு ரூ.17 என்றும் விலை வழங்கப்பட்டது. இந்த விலை உயர்வு இந்த ஆண்டு நீடித்திருக்க வேண்டும் என்ற எதிர் பார்ப்பு விவசாயிகள் மத்தியில் இருந்து வருகிறது.

## உணவு பணவீக்கம் சரிவால் டீசல் விலை படிப்படியாக உயரும் என பெட்ரோலிய அமைச்சர் தகவல்

இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு

ஐதராபாத்

உணவு பணவீக்கம் சரிவடைந்துள்ளதால், டீசல் விலை படிப்படியாக உரிய நேரத்தில் உயர்த்தப்படலாம் என மத்திய பெட்ரோலிய மற்றும் இயற்கை எரிவாயுத் துறை அமைச்சர் எஸ்.ஜெய்பால்ரெட்டி தெரிவித்துள்ளார்.

பொருளாதாரம்

அவர் மேலும் கூறும்போது, “டீசல் விலையை திடீரென உயர்த்துவதால், அது பொருளாதாரத்தில் தாக்கத்தை ஏற்படுத்தும். இந்நிலையில், உணவு பணவீக்கம் கட்டுக்குள் வந்துள்ளது. எனவே, டீசல் விலை உயர்வு பற்றி முடிவு செய்வதற்கு முன்னர் இது குறித்து மாநில அரசுகளுடன் விவாதிக்கப்படும்” என்று தெரிவித்துள்ளார்.

கடந்த டிசம்பர் மாத இறுதியில், நாட்டின் உணவு பணவீக்கம் பல ஆண்டுகளில் இல்லாத அளவிற்கு 2010–ஆம் ஆண்டின் இதே மாதத்தைக் காட்டிலும் 3.36 சதவீதம் சரிவடைந்துள்ளது. எனவே, டீசல் விலையை உயர்த்துவது குறித்து பரிசீலனை செய்யப்பட்டு வருவதாக தெரிகிறது.

இருப்பினும், ஐந்து மாநிலங்களின் சட்டசபை தேர்தல் முடிவடைவதற்கு முன்னர் டீசல் விலை உயர்த்தப்பட வாய்ப்பில்லை என்று தெரிகிறது.

கடந்த 2010 ஜூன் மாதத்தில் ஒரு லிட்டர் டீசல் மற்றும் மண்எண்ணெய் விலை முறையே ரூ.3 மற்றும் ரூ.2 உயர்த்தப்பட்டது. ஒரு சிலிண்டர் சமையல் எரிவாயு விலை ரூ.50 உயர்த்தப்பட்டது.

இந்நிலையில், தற்போது ரூபாய் மதிப்பு சரிவால் கச்சா எண்ணெய் இறக்குமதி செலவினம் அதிகரித்துள்ளது. அமெரிக்கா – ஈரான் பிரச்சினையால் கச்சா எண்ணெய் விலை மேலும் உயரும் என்ற அச்சப்பாடு நிலவி வருகிறது.

வருவாய் இழப்பு

இந்தியன் ஆயில், பாரத் பெட்ரோலியம், இந்துஸ்தான் பெட்ரோலியம் ஆகிய நிறுவனங்கள் டீசல், மண்எண்ணெய், சமையல் எரிவாயு ஆகியவற்றை அடக்க விலைக்கும் குறைவாக விற்பனை செய்து வருவதால் வருவாய் இழப்பு ஏற்பட்டு வருகிறது. கடந்த 2010–11–ஆம் நிதி ஆண்டில் ரூ.78,000 கோடியாக இருந்த இந்த வருவாய் இழப்பு, நடப்பு நிதி ஆண்டில் ரூ.1,21,000 கோடியாக உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது.